அவ்வளவுதான் இருக்கிறது. ஆகையினுலே அதைக் கேட்க வேண்டுமே ஒழிய அமைச்சர் பேசியது சரியான புரோசிஜர் தானு என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது சட்ட மன்ற விதிமுறைகளின்படி ஓர் ஒற்றி வைப்புத் தீர்மானம் கொண்டுவந்தால், அது ஒற்றி வைப்புத் தீர்மானமாக ஏற்றுக் கொள்வதற்கு உரியதா, இல்லையா என்பதை சபாநாயகர் முடிவு செய்வார். அப்படி முடிவு செய்யும்பொழுது சில சமயங்களில் அறையிலே கூட விதிமுறைகளை ஒட்டி அது ஒற்றிவைப்புத் தீர்மானத்தின்கீழே வராது என்று சொல்லி, அனுமதி மறுக்கலாம். அம்மாதிரி சமயங்களும் உண்டு. சில நேரங்களில் உறுப்பினர் கருத்தை அறிந்த பிறகு அது ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு உரியதா, இல்லையா என்று முடிவு செய்யக்கூடிய நிலைமையும் உண்டாகலாம். அந்த நிலையில் உறுப்பினர் அவர்களுக்கு ஒரு வாய்ப்பு அளித்து, அது எந்த முறையில் ஒற்றி வைப்புத் தீர்மானத்தின் கீழ் வரும் என்பதை அவர் விளக்கிய பிறகு, அதற்குரிய அமைச்சர் அவர்களிடமிருந்து அது ஒற்றி வைப்புத் தீர்மானத்திற்கு உரியதா, இல்லையா என்ற கருத்தை அறிந்த பிறகு, சபாநாயகர் அதுபற்றி ஒரு முடிவுக்கு வரலாம். இது தான் முறை.

திரு. சா. மெய்யப்பன் : விதியில் இடமில்லை. சம்பிரதாயம் என்பது தலைவர் அவர்களுடைய அபிப்பிராயமா ? எல்லாவற்றிற்கும் இது போல் உண்டா ?

MR. DEPUTY SPEAKER : Where the Speaker is not in possession of full facts to decide the admissibility of a notice, he may mention in the House the receipt of the motion and after hearing a brief statement from the member and or the Minister concerned whether the matter sought to be raised is with in the rules, give his decision on merit.

என்று விதிமுறைகள் இருக்கின்றன. விதிமுறைகளை ஒட்டித்தான் தீர்ப்பு வழங்கப்படுகிறது.

அவை முன்னவர் அவர்கள் விளக்கியபடி, இது அரசினுடைய அன்றாட நிகழ்ச்சிகளுக்குட்பட்டதே தவிர, அப்பாற்பட்ட நிகழ்ச்சி அல்ல என்ற காரணத்தினுல், இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

4. கவன ஈர்ப்பு

வரகநேரி கிராமம், பெரியார் நகர்ப் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து

திரு. ஆ. கு. சுப்பையா : 14—7—1968-ம் நாள் திருச்சி வரகநேரி கிராமம் பெரியார் நகரப் பகுதியில் நிகழ்ந்த கோரமான தீ விபத்து பற்றியும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு அளித்த நிவாரணம் பற்றியுமான அவசரமும் பொதுமுக்கியமுமான காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

1968 ஆகஸ்ட் 19]

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, there was a fire accident (Acidental one) in Periyar Nagar, Varaganeri village of Tiruchirappalli taluk, at 2 p.m. on 14th July 1968 in which about 347 houses were gutted, 4 women and 3 children lost their lives and about 7 herds of cattle perished. The loss was estimated at Rs. 2 lakhs.

The Collector who inspected the scene of accident on that day immediately arranged for feeding and other relief measures such as disbursement of cash grants to eligible victims. 128 families which were affected by fire were paid Rs. 80 each by the Collector towards housing and clothing grant and 110 families were paid Rs. 20 each towards clothing grant only. The remaining 109 families were not eligible for any of the grants.

5. அறிவிப்புகள்

(i) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, இனங்கள் (தீர்வை விதித்தல்) (திருத்த) மசோதா

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு 1968-ம் ஆண்டு இனங்கள் (தீர்வை விதித்தல்) (திருத்த) மசோதாவை இப் பேரவை முன் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : நான் ஒரு மணி நேர விவாதத்திற்கு 57-வது விதியின்படி ஒரு அறிவிக்கை கொடுத்திருக்கிறேன். அது மிகவும் அத்தியாவசியமானது, முக்கியமானது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் மழை இல்லாத காரணத்தினால், குடியாத்தம், வேலூர், திருப்பத்தூர், செய்யாறு போன்ற சில பகுதிகள் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் 57-வது விதியின்படி ஒரு மணி நேர விவாதத்திற்குக் கேட்டிருக்கிறார்கள். அதைப்பற்றிய முடிவை என்னுடைய அறையிலே வந்து கேட்டுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

6. அரசினர் மசோதாக்கள்

(i) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, இனங்கள் (தீர்வை விதித்தல்) (திருத்த) மசோதா

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு, 1963-ம் ஆண்டு இனங்கள் (தீர்வை விதித்தல்) (திருத்த) மசோதாவை இந்த மாமன்றத்தின் திருமுன் அறிமுகம் செய்ய அனுமதிக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் இந்த மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.